பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 19 ஞாயிற்றுக்கிழமை 05.12.2021 கதிர் 258

## முல்லைக் கடலில் மூவரைக் காணோம்

### ஒருவர் சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிசெ.05

முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரையில் குளிக்கச் சென்ற மூன்று இளைஞர்களைக் காணவில்லையென முல்லைத்தீவு 2

## புதிய பஸ் நிலையத்திலிருந்து வெளிமாவட்ட சேவையில் ஈடுபட வடக்கு பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு ஆளுநர் அழுத்தம்

### நல்ல முடிவை எடுக்குமாறு கூறி கூட்டத்திலிருந்து வெளியேறினார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடுவது தொடர்பில் ஆளுநர் தலைமையில் நடைபெற்ற சந்திப்பிலும் இணக்கம் இன்மையால் கூட்டத்தில் இருந்து வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாநகர மேயர் ஆகியோர் வெளியேறினர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ் களுக்கான பஸ் நிலையம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட நாள் முதல் அங்கிருந்து தாம் சேவையில் ஈடுபடமாட்டோம் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலைகளின் தொழிற்சங்கங்கள் மறுத்து வருவதால், அவர்கள் அங்கிருந்து சேவையில் ஈடுபட்டால் மாத்திரமே நாமும் அங்கிருந்து சேவையில் ஈடுபடுவோம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களும் தெரிவித்து வருகின்றன. 2



## கிளிநொச்சியில் மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞர் மரணம்!

### சிறுவன் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி – உமையாள்புரம் பகுதியில் மர்மப்பொருள் ஒன்றைப் பரிசோதித்தபோது, அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அத்துடன் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளார். 2



## அடுத்த தடவையும் கோட்டாவே வெற்றி

### அமைச்சர் ரோஹித அதிரடி

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராகச் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டால் சஜித் பிரேமதாஸ போல் நிச்சயம் படுதோல்வியடைவார். அடுத்த தடவையும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே களமிறங்குவார். அந்தத் தேர்தலிலும் அவர் அமோக வெற்றி யடைவார். 2



## ‘கெசல்வத்தபவாஸ்’ வெட்டிப் படுகொலை

கொழும்பு, பழைய சோனகத் தெருவில் இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

‘கெசல்வத்த பவாஸ்’ என்றழைக்கப்படும் இளைஞரே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 2

## விசாரணை அறிக்கை அடுத்த வாரம் வெளியீடு



சமையல் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, எதிர்வரும் இரண்டு வாரங்களில் முதற்கட்ட விசாரணைகள் சம்பந்தமான தகவல் 2

## வெளிநாடுகளை நாடுவதால் அரசியல் தீர்வு கிடைக்குமா?

### கூட்டமைப்பிடம் தினேஷ் கேள்வி


தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரச மைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே எமது அரசின் திட்டம். அதைவிடுத்து அமெரிக்காவையும், இந்தியாவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

- இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஒரு 2



## இங்குள்ள தமிழ் மக்களுக்கு அரசுதான் தீர்வை வழங்கும்

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு அரசுதான் தீர்வை வழங்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்தியா இருக்கின்றது; எமக்குத் தீர்வைத் தரும் என்று தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றி வருகின்றது. அதன் வெளிப்பாடாகத்தான் மீண்டும் புதுடில்லிக்குச் செல்ல கூட்டமைப்பின் தலைவர்கள் முயல்கின்றனர். தமிழ் மக்களை இனியும் மடையர்களாக்க முயல வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் பிரச் 2

## முல்லைக் கடலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து ஹயஸ் வாகனத்தில் வந்தவர்கள் குளிக்கச் சென்ற சமயமே நேற்று மாலை - சற்று முன்னர் - கடலில் காணாமல் போயுள்ளனர். காணாமல்போனவர்களை தேடுவதற்காக கடற்படையினரின் உதவியும் மீனவர்களின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

இருந்தபோதும் காணாமல்போனவர்கள் தொடர்பில் இச்செய்தி பிரசுரமாகும் சமயம் ஒரு சடலம் மீட்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

## புதிய பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனால் புதிய பஸ் நிலையம் பயன்பாடில்லாமல் காணப்படுகின்றது. இந்த விடயத்துக்குத் தீர்வு காணும் நோக்கில் இன்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தனது அலுவலகத்துக்கு இ.போ.ச. வடபிராந்திய அலுவலகத்தின் பிரதிநிதிகளை பேச்சுக்கு அழைத்தார்.

சந்திப்பிற்கு யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணனும் அழைக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் , இ.போ.ச. பிரதிநிதிகள் புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபட மறுப்புத் தெரிவித்தனர்.

அதையடுத்து ஆளுநர், மக்களின் வரிப்பணத்தை வீணடிக்க முடியாது. தனிநபர், குழுக்களின் சுயலாபத்துக்காக புதிய பஸ் நிலையத்தைத் தேடுவாரற்று விட முடியாது எனக் கூறி நல்லதொரு முடிவாக எடுங்கள் எனக் கூறி விட்டு கூட்டத்தை விட்டு வெளியேறினார். இதனைத் தொடர்ந்து மாநகர மேயரும் வெளியேறினார்.

அதனால் இ.போ.ச. பிரதிநிதிகள் ஆளுநர் அலுவலகத்தினுள் நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு வெளியேறினர். தங்கள் மீது ஆளுநர் முறையற்ற அழுத்தம் தருகின்றார் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் இ.போ.சபையினர் ஓர் இணக்கத்துக்கு வராத போதும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் எதிர்வரும் புதன்கிழமை முதல் புதிய பஸ் நிலையத்துக்கு செல்ல இணங்கும் அதேநேரம், இதற்கு பொதுமக்களும் ஊடகங்களும் தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அடுத்த தடவையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவைக் களமிறக்கத் தெற்கில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது எனவும், வடக்குக்கு தற்போது பயணம் மேற்கொண்டுள்ள சம்பிக்க ரணவக்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகுவதற்கு முன்னரே சஜித் பிரேமதாஸ நாட்டின் 24 மாவட்டங்களிலும் சூறாவளிபோல் சுற்றித் திரிந்தார்; தேர்தல் பிரசார மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசினார். ஆனால், இறுதியில் அவர் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

சஜித் பிரேமதாஸ போல் ஜனாதிபதி பதவி ஆசையில் தற்போது சம்பிக்க ரணவக்கவும் கிளம்பியுள்ளார் போல் தெரிகின்றது. அவரும் சஜித் போல் படுதோல்வியடைவார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வரிசையில் சம்பிக்க மட்டுமன்றி பலபேர்களமிறங்கினாலும் அவர்களைத் தோற்கடித்து மீண்டும் ஜனாதிபதிக் கதிரையில் கோட்டாபய ராஜபக்ஷ அமருவார். சிங்கள - பௌத்த மக்களின் அமோக வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கே கிடைக்கும். அதை எவரும் தட்டிப் பறிக்க முடியாது - என்றார்.

## 'கெசல்வத்தபவாஸ்' ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழு, குறித்த இளைஞரை வாளால் வெட்டியும், கத்தியால் குத்தியும் கொலைசெய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் ஆரம்பகட்ட தகவல்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பகுதியில் இன்று மாலை 3.30 மணியளவில் மர்மப்பொருள் ஒன்றை கிரைண்டர் ஒன்றால் வெட்டிய போது, அது வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

25 வயதுடைய சிவலிங்கம் யுவராஜ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவரது சகோதரனான சிவலிங்கம் நிலக்சன் என்ற 16 வயது சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## விசாரணை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களை வெளியிடவுள்ளது.

அத்துடன் இன்று முதல் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதியளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள நுகர்வோர் அதிகார சபை, எரிவாயு மாதிரிகள், இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் பகுப்பாய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட அறிக்கைக்கு அமைய தொழில்நுட்பக் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் லிட்ரோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் எதிர்வரும் வாரத்தில் வாக்குமூலம் பெறப்படவுள்ளது என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

அவர்களை நிபுணர் குழுவுக்கு அழைத்து வாக்குமூலம் பெறப்படவுள்ளது என அதன் தலைவர் சாந்த வல்பலகே தெரிவித்தார்.

## வெளிநாடுகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனநாயக நாடு. இங்கு மக்கள் ஆணையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இருக்கின்றார்; பிரதமர் இருக்கின்றார். அதுமட்டுமன்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான அரசு உள்ளது. இந்த மூன்று தரப்பினரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாக உள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தாம் நினைத்த மாதிரிச் செயற்படுகின்றனர்.

அவர்கள் வெளியகத் தீர்வை விரும்புகின்றனர். அதனால்தான் அவர்கள் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஓடித் திரிகின்றனர்.

உள்நாட்டுப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வே அவசியம். அதைவிடுத்து வெளியகத் தீர்வைப் பெற முயற்சிப்பதால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

## இங்குள்ள தமிழ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் மீண்டும் கொரோனாவின் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொரோனாவுக்கு மத்தியிலும் தமது ஏமாற்று அரசியலை நடத்துகின்றனர்.

எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுதான் தீர்வை வழங்கும்.

எந்த நாட்டின் அழுத்தங்களுக்கும் இலங்கை அடிபணியாது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (A+ குருதி இனம்) அவசரமாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விரும்புபவர்கள் புகைபிடித்தல், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். HLA Report வைத்திருப்பவர்கள் அவசரமாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 0773126807

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

நானும் சொல்கிறேனே.....!

காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு
"என்னை ஊக்கப்படுத்தியவை!"

உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 08.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்
நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாகிஸ்தானில் நடந்தது புதியதல்ல

பாகிஸ்தானில் நடந்த மோசமான – மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத – ஓர் இழி செயலை அறிந்து, அதன் காணொலிகளைப் பார்த்து, அதிர்ந்து போயிருக்கிறோம். நமது சிங்களச் சகோதரன் ஒருவனுக்கு நிகழ்ந்த இந்தக் கொடூரம், மனித குலத்தில் எவருக்கும் நடக்கவே கூடாது என்பதுதான் எமது பிரார்த்தனை.

நம்மைப் போலவே நமது நாட்டின் பௌத்த, சிங்களச் சகோதரர்கள் மனதிலும் இவ்விடயம் கடும் அதிர்வுகளை, ஆழ்ந்த வெறுப்பை, கோபத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் நிச்சயம்.

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவருக்கு நடந்த இந்தச் சம்பவம் எங்கள் அனைவரையும் – இந்த இலங்கைத் தீவின் அனைத்து மக்களையும் – மதம், மொழி, இனம் கடந்து சீற்றத்தில் ஆழ்த்தியிருக்கின்றது என்பது மிகமிக உண்மை.

ஆனால், இந்த விவகாரத்தை ஒட்டி மறக்கவெண்ணா ஒரு சம்பவம் இலங்கையில் நடந்தேறியிருக்கின்றமையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்டுவது அவசியமாகும்.

அதுவும், பௌத்த, சிங்கள பேரினவாத மேலாண்மைத் திமிரிலும் வெறியிலும் இன்னும் கும்மாளமிடும் தென்னிலங்கைச் சக்திகளுக்கு இதைச் சுட்டிக்காட்டி நினைவூட்டுவது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதும் கட்டாயமானதுமாகும்.

இந்த இலங்கைத் தீவில் நம் தமிழ் மக்களின் சகோதரர்களாக வாழும் பௌத்த, சிங்களச் சகோதரரே!

பாகிஸ்தானில் இப்போது நடந்தது புதிய விடயமல்ல. உங்களுடைய முந்திய தலைமுறை 64 ஆண்டுகளுக்கு முன்னர் அப்பாவி இந்து மத குரு ஒருவருக்குச் செய்த அதே கொடூரம்தான்.

அதுவும் தமிழர்கள் தங்கள் வாழ்வியலுக்கான உரிமைகளை – இருப்பியலுக்கான கௌரவங்களை – அடிப்படை உரிமைகளை – தக்க வைப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடத் தலைப்பட்டமைக்கு ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் நடந்த கொடூரம் அது. அதாவது அஹிம்சை வழியில், தங்களது நீதி, நியாயமான உரிமைகளுக்காக போராடிய காலத்தில் இடம்பெற்ற குரூரம் அது.

இப்போதாவது பாகிஸ்தானில் இஸ்லாமிய மார்க்கத்தின் இறைதூதர் நபிகள் நாயகத்தையும், இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குரானையும் இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த அநாகரிகச் செயல் தூண்டப்பட்டு அது அரங்கேறியிருக்கின்றது.

ஆனால், அன்று, தன்னுடைய இந்துக் கடவுளை மதித்துப் பூசித்தமையைத் தவிர, வேறு தவறு ஏதும் செய்யாத இந்துப் பூசகர் ஒருவரை, பாணந்துறையில் கோவில் ஒன்றில் இருந்து அஞ்சி நடுங்கி, ஒளித்து இருந்த வேளையில், தரதரவென்று இழுத்து வந்து, பெற்றோல் நிலையம் அருகே துடிக்கத் துடிக்க தீயிட்டுக் கொளுத்தியது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறித்தனம்.

அத்தகைய பேரினவாதக் கொடூரங்களே பிரபாகரன் என்ற வீரனைப் புடம்போட்டு உருவாக்கின என மூத்த தமிழ் ஊடகவியலாளரான அமரர் ரி.சபாரத்தினம் தமது கட்டுரையில் விவரிக்கின்றார்.

பாணந்துறையில் 1958 இல் மிருகத்தனமாக அரங்கேறிய இந்தக் கொடூரம் பற்றிய சபாரத்தினத்தின் கட்டுரையை வாசிப்பவர்கள், அது அப்படியே பாகிஸ்தானில் இப்போது இடம்பெற்ற கொடூரத்தை ஒத்திருக்கின்றமையை அச்சொட்டாகப் புரிந்துகொள்ள முடியும்.

இப்போது பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பவம் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் பாவனை காரணமாக எமது மனங்களை விரைந்து தட்டியுள்ளது. ஆனால் இந்தக் கொடூரத்தை ஒத்த மிருகத்தனத்தை ஐம்பதுகளின் பிற்பகுதியில் தாங்கள் அரங்கேற்றியதன் விளைவுதான் எழுபதுகளில் தமிழர்களின் உரிமைப்போர் ஆயுத வழிக்குத் திரும்பி, எமது நாட்டில் இரண்டரை தசாப்த காலம் நீடித்த இனப் போராக வெடித்தது என்பதை பௌத்த, சிங்கள சகோதரர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அந்தப் பழைய சம்பவங்களை நினைவூட்டுவது இனக் குரோதத்தை வளர்க்கலாம். ஆனால் அதுதான் உண்மை.

பாகிஸ்தானில் அன்று நடந்தது, இங்கு என்றோ சிங்களவர்கள் புரிந்ததுதான் என்பதை சிங்களச் சகோதரர்கள் உணர்வது நல்லது.




## இரத்தம் சிந்திய பழைய விடயங்களை மறந்து, மன்னித்து முன்னேறுவோம்

### யாழ்ப்பாணத்தில் சம்பிக்க ரணவக்க அழைப்பு

**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,டிச.5

கடந்த காலத்தில் நடந்த, இரத்தம் சிந்திய விடயங்களை மறக்க முடியா விட்டாலும், மறந்து அவற்றுக்கு மன்னிப்புக் கொடுத்து, தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டுமென முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர், நேற்று தனியார் விடுதியில் இடம்பெற்ற 43 படையணியின் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடலுக்குப் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புலம்பெயர்ந்தவர்கள் எம்முடன் மீண்டும் இணைந்து கைகோர்க்க வேண்டும். கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய விடயங்களை மறக்க முடியா விட்டாலும், மறந்து, அதற்கு மன்னிப்புக் கொடுத்து, தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். சிங்கள மக்கள் பெருவாரியான வாக்குகளை தற்போதைய ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தார்கள். ஆனாலும் தற்போது அதே சிங்கள மக்கள் அவரை வெறுக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் 2023 ஆம் ஆண்டு இடம் பெறும். அந்த நேரத்தில் நேர்மையான – துஷ்பிரயோகத்திற்கு – எதிரான செயற்படுகின்ற ஒருவர் களமிறக்கப்படுவார்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சொல்வதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம். எங்களுடன் நீங்களும் கைகோர்க்க வேண்டும்.

43 படையணியை நீங்கள் படையணியாக கருதக்கூடாது எதிர்காலத்தில் அரசியலில் வியூகங்களை வகுக்க உருவாக்கப்பட்ட அமைப்பே இதுவாகும்.

1943 நமக்கு கிடைத்த இலவசக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு 43 படையணி இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆகவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல எம்முடன் அனைவரும் கைகோர்க்க வேண்டும்.– என்றார்.

## வவுணதீவில் பொலிஸார் இருவரின் படுகொலையை புலிகள் மீது சுமத்த ஆலோசனை வழங்கியவர் யார்?

### அம்பலப்படுத்துங்கள் என்கிறார் ஜே.வி.பி. தலைவர்





வவுணதீவில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கம் திருப்ப ஆலோசனை வழங்கியவர் யார் என்பதை வெளிக்கொண்டுவர வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கேட்டுக்கொண்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அச்சம்பாவத்தை பொறுப்பேற்க அழுத்தம் கொடுத்தவர்கள் யார் என்ற தகவல்களையும் அரசாங்கம் வெளியிட வேண்டும் என அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 52 நாள்கள் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வவுணதீவு கொலைச் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் பக்கம் கொண்டு செல்ல ஆலோ சனை வழங்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் சஹ்ரான் குழுவினரால் அது மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்த நேரத்தில் அவர்களைக் கைது செய்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலை தடுத்திருக்கலாம். ஆனால் அந்தச் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கத்திற்கு திருப்ப, வேண்டுமென்றே அப்படிச் செய்யப்பட்டதா என்றும் அனுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பினார். இதேவேளை சஹ்ரான் உள்ளிட்ட குழுவினருக்கு இராணுவப்புலனாய்வுப் பிரிவினால் சம்பளம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் குறித்த உண்மைத்தன்மையை வெளிப்படுத்துமாறும் அனுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பயன்படுத்திய ஆவணங்கள் இருந்த கணனிகளை பயன்படுத்திய நபர்கள் யார் என்ற தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## வெடி மருந்துடன் கட்டுநாயக்காவுக்கு வந்தவர் கைது

பொற்றாசியம் – பெர்குளோரைட்டு எனப்படும் 25 கிலோ வெடி மருந்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குள் நுழைய முற்பட்ட சாரதியொருவர் விமான நிலைய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தான் பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளேன் எனவும், அதற்காகவே அவற்றை அனுமதியுடன் கொண்டு வந்தேன் எனவும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார். பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜாவா எரிமலை வெடிப்பு; ஒருவர் உயிரிழப்பு



இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் எரிமலை வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் பலர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செமெரு மலையிலிருந்து பாரிய அளவிலான புகை மூட்டம் ஏற்பட்டதுடன் அடர்த்தியான புகை சூரியனை மறைத்தமையினால் அக்கிராமம் இருளில் மூழ்கியது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 41 என்றும் அவர்கள் தீக்காயங்களுக்கு ஆளானார்கள் எனவும் லுமாஜாங் மாவட்டத்தின் துணைத் தலைவர் கூறியுள்ளார்.

கட்டடங்களில் சிக்கியுள்ள குறைந்தது 10 பேரையாவது மீட்க ஹெலிக்கொப்டர்கள் உதவி அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் 35 பேர் உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என இந்தோனேசியாவின் பேரிடர் முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது. இந்த வெடிப்பின் காரணமாக மூச்சுத் திணறல், மின் தடை மற்றும் மழையால் குப்பைகள் சேற்றாக மாறியதால் வெளியேற்றும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

## இரண்டே மாதங்களில் பதவியை இராஜிநாமா செய்த ஆஸ்திரியா அதிபர்!



ஆஸ்திரியா புதிய அதிபர் அலெக்சாண்டர் ஷாலென் பெர்க், பதவியேற்ற இரண்டு மாதங்களில் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து அதிபர் அலெக்சாண்டர் ஈலென் பெர்க், தனது பதவியை துறந்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'ஆஸ்திரியாவில் அதிக வாக்குகளைப் பெற்ற அரசாங்கத்தின் தலைவர் மற்றும் கட்சியின் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளும் விரைவில் ஒரு கைக்குள் இணைக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்' என கூறினார்.

சந்தேகிக்கப்படும் லஞ்சம் மற்றும் நம்பிக்கை மீறல் தொடர்பான விசாரணையின் இலக்குகளில் குர்ஸ் ஒருவர் என்று ஆஸ்திரிய வழக்கறிஞர்கள் அறிவித்தனர். குர்ஸின் அரசாங்கத்தில் இளைய கூட்டணிப் பங்காளிகளான பசுமைவாதிகள் அவரை மாற்றக் கோரினர்.

இதனிடையே கன்சர்வேடிவ் ஆஸ்திரிய மக்கள் கட்சி, புதிய தலைவரை அறிவித்தவுடன் தான் பதவியில் இருந்து விலகுகிறேன் என முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஷால்லென் பெர்க் கூறினார். முன்னாள் அதிபர் செபாஸ்டியன் கர்ஸின் இராஜிநாமாவைத் தொடர்ந்து, கடந்த ஒக்ரோபர் மாதம் புதிய அதிபராக அலெக்சாண்டர் ஷாலென்பெர்க் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரியா மக்கள் கட்சித் தலைவராக இருக்கும் முன்னாள் அதிபர் செபாஸ்டியன் கர்ஸ், தனது குடும்பத்தினருடன் கூடுதல் நேரத்தை செலவிடும் வகையில் அரசியலைவிட்டே விலகுகிறேன் தாக அறிவித்தார்.

இதையடுத்து, நாட்டின் உள்துறை அமைச்சராக இருக்கும் கார்ல் நெஹாமர், ஆஸ்திரியா மக்கள் கட்சியின் தலைவராகவும், அதிபர் பொறுப்பையும் ஏற்க வாய்ப்புள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## உக்ரைன் பதற்றங்களுக்கு மத்தியில் பைடனும் புடினும் பேச்சு



உக்ரைனில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், ஜோ பைடனும் விளாடிமிர் புடினும் செவ்வாய்க் கிழமை காணொலி மூலம் பேச்சு நடத்துவார் கள் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான பாரிய அளவிலான தாக்குதலுக்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் அமெரிக்காவிடம் இருப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன் அண்மையில் கூறியிருந்தார்.

இருப்பினும் அத்தகைய செய்திகளை மறுத்துள்ள ரஷ்யா, உக்ரைனே தனது சொந்தப் படைகளை குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள பேச்சின்போது, உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவ நடவடிக்கைகள் குறித்த அமெரிக்காவின் கவலைகளை ஜோ பைடன் சுட்டிக்காட்டுவார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. மேலும் உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான அமெரிக்காவின் ஆதரவை ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் உறுதிப்படுத்துவார் என்றும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

கவச வாகனங்கள், மின்னணு போர் முறைமைகள் மற்றும் 94 ஆயிரம் துருப்புக்களை ரஷ்யா எல்லையில் நிறுத்தியுள்ளதாக உக்ரைன் கூறுகிறது.

2014 ஆம் ஆண்டு உக்ரைனிடம் இருந்து கிரிமியா நகரை இணைத்ததில் இருந்து அதன் எல்லையில் ரஷ்யப் படைகள் அதிக அளவில் குவிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட கடாபியின் மகனுக்கு அனுமதி



லிபிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட, அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் சயீப் அல்-இஸ்லாமுக்கு தேர்தல் ஆணையம் விதித்திருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் தடையை எதிர்த்து, நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் சையிப்பை தகுதி நீக்கம் செய்யும் தேர்தல் ஆணையத்தின் முடிவை ரத்து செய்து, அவர் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கி தீர்ப்பளித்தது.

இதனால் கடாபியின் மகன் சையிப் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

கடாபியின் ஆட்சிக் காலத்தின்போது அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட குற்றத்துக்காக திரிபோலி நீதிமன்றம் சயீபுக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

மேலும், அவர் மனித உரிமை மீறலில் ஈடுபட்டார் என சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது. இந்தச் சூழலில், அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கு முதல் கட்ட தேர்தல் அடுத்த மாதம் 24ஆம் திகதியும், இரண்டாம் கட்ட தேர்தல் ஜனவரி 24ஆம் திகதியும் நடைபெற உள்ளது. அங்கு தற்போது முகமது அல் மெனிபி என்பவர் ஜனாதிபதியாக உள்ளார்.

லிபியாவின் ஜனாதிபதியாக 1969ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டுவரை பதவி வகித்தவர் முஅம்மர் அல் கடாபி. 40 ஆண்டுகளாக நடைபெற்று வந்த கடாபியின் ஆட்சி, கடந்த 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி முடிவுக்கு வந்தது. அவர் கிளர்ச்சிப்படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு, உடனடியாக சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து கிளர்ச்சியாளர்களால் சயீப் அல்-இஸ்லாம் கைது செய்யப்பட்டார்.

பின்னர் தொடங்கிய உள்நாட்டுப் போரில் கடாபி கொல்லப்பட்டார். சயீபை கைது செய்து வைத்திருந்த அபுபக்கர் அல்-சித்திக் என்ற அமைப்பினர் அவரை 2017ஆம் ஆண்டு விடுவித்தனர்.

# நிபுணர் குழு பரிந்துரைத்தால் பூஸ்டர் தடுப்பூசி இந்திய சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்

கொரோனா வைரஸின் புதிய உரு மாற்றமடைந்த ஒமிக்ரோன் வைரஸ் வேகமாகப் பரவக்கூடியது என்பதால் அது தொடர்பாக இந்தியாவுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர். ஒமிக் ரோனை, ‘கவலைக் குரிய உருமாற்றம்’ என்று உலக சுகாதார அமைப்பும் குறிப் பிட்டுள்ளது.

இந்த நிலையில் ஒமிக்ரோன் வைரஸின் அபாயத்தைத் தடுக்க இந்தி யாவில் கொரோனாத் தடுப்பூசி 2 டோஸ்களைச் செலுத்திக் கொண்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போடுவது குறித்து இந் திய மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கொரோனா உருமாற்றத்தைக் கண்காணிக்கும் இந்தியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

2 டோஸ் தடுப்பூசிகள் ஒமிக் ரோனை முழுமையாக எதிர்க்கும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்றும் ஒமிக்ரோனை எதிர்கொள்ள பூஸ்டர் ஊசி அவசியம் என்றும் தகவல் கள் வெளியாகிவருகின்றன. இந்த நிலையில், நிபுணர் குழு பரிந்துரைத்தால் பூஸ்டர்தடுப்பூசியைச்செலுத்தலாமமென இந்திய மத்திய அரசு முடிவுவெடுத்துள் ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறி யுள்ளார்.

கொரோனாத் தடுப்பூசி பூஸ்டர் டோஸ் அல்லது குழந்தைகளுக்கான தடுப் பூசிகள் குறித்த எந்தவொரு முடிவும் இந்த விடயத்தைக் கவனிக்கும் நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கண்டிப்பாக எடுக் கப்படும். ஆனால், இந்த முடிவுகளை அவசரப்படுத்தவோ, அரசியலாக் கவோ முடியாது. இது தூய அறிவி யல் மற்றும் அறிவின் அடிப்படை யில் இருக்கவேண்டும்.

தொற்றுநோயின் தொடக்கத்தில் மருத்துவ உள்கட்டமைப்பை வலுப் படுத்தினோம். கடந்த 2 ஆண்டுகளில் துணிச்சலான முடிவுகள் எடுக் கப்பட்டன. ஒருவர் தடுப்பூசி கண்டு பிடிப்பது பற்றி ஆராய்ச்சி செய்தால் அதற்கு ஒப்புதல் பெற 3 வருடங்களாகும். நாங்கள் அந்த விதிகளை அகற்றினோம். ஆராய்ச்சிக்குப் பிறகு ஒரு வருடத்திற்குள்



தடுப்பூசியைப்பெற்றோம். அதுபோலவே, ஏனைய முடிவுகளும் அறிவியல், மருத் துவத் துறையினரின் ஆலோசனை களின்படி எடுக்கப்படும், என்று அவர் தெரிவித்துள்ளார்.






# உயிரிழந்த விவசாயிகளுக்கு இழப்பீடு அளிக்காதது ஏன்?

## ஊடகச் சந்திப்பில் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கேள்வி

வேளாண் சட்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளின் விவரங்களை இந்திய மத்திய அரசு ஏன் சேகரிக்கவில்லை? என கேள்வி எழுப்பிய காங்கிரஸ் எம்.பியான ராகுல் காந்தி, உயிரிழந்த விவசாயிகளின் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் மத்திய அரசிடம் இல்லை என நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி அதற்கான பட்டியல் ஒன்றைத் தயாரித்திருப்பதாக செய்தியாளர்களைச் சந்தித்த ராகுல் காந்தி குறிப்பிட்டார்.

மத்திய அரசு தவறான சட்டங்களை அமுல்படுத்தியதால் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி சட்டங்களை ரத்துச் செய்து மன்னிப்பும் கோரியுள்ளார். அப்படியிருக்க, உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு அளிக்காதது ஏன்?, என ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார். மனிதாபிமான அடிப்படையில் விவசாயிகளின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்கள், அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய குழந்தைகள், அவர்களுடைய கல்வி, குடும்பத்தாரின் ஆரோக்கியம், ஆகிய-வற்றை எண்ணி மனிதாபிமான அடிப்படையில் நட்ட ஈடு வழங்க வேண்டும், என ராகுல்காந்தி தெரிவித்தார். ஆனால், இந்திய மத்திய அரசு அப்படிச் செய்யும் என மக்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் விமர்சனம் செய்தார்.

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கப்படும் போது, பணம் இல்லை என அரசு சொல்கிறது. ஆனால், அவர்களுக்கு ஆதரவாக செயல் படும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சாதக மான திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்படுகிறது, என ராகுல் காந்தி சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் ஆட்சியிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு அளிக்கப்பட்டுள்ளது என ராகுல் காந்தி தெரிவித்தார். அந்தப் போராட்டத்துக்கு பஞ்சாப் அரசு காரணம் அல்ல என்றாலும் மனிதாபிமான அடிப்படை யிலேயே நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது என அவர் விளக்கினார். ஒரு தவறும் செய்யாத பஞ்சாப் அரசு இழப்பீடு அளித்திருக்கும் நிலையில், போராட்டத்துக்கு மூல காரணமாக இருந்த மத்திய அரசு நட்ட ஈடு அளிக்க மறுப்பது ஏன்? என ராகுல் காந்தி அங்கு கேள்வி எழுப்பினார்.





# சிலிண்டர் வெடிப்புகளை வைத்து அரசியல் லாபம் தேட முயலாதீர்கள்

## எதிர்க்கட்சிகளிடம் வியாழேந்திரன் கோரிக்கை

நாட்டில் சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவத்தை வைத்து எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் அடைய நினைக்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது –

நாட்டில் சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கையினை முன்னெடுக்கத் தயாராகி வருகிறது. மக்களுக்குப் பாதிப்பாகி ஏற்படுத்துகின்ற எந்தவொரு விடயத்தையும் அரசாங்கம் அனுமதிக்காது. எதிர்க்கட்சியினர் இவ்வாறான சம்பவங்களை அரசியல் மயப்படுத்த வேண்டாம் எனக் கோருகிறோம்.

தமிழ் மொழி பாடசாலைகளில் மாணவர்கள் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் தமிழ் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கும் செயற்பாடு முதல் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாண கல்வி திணைக்கள பணிப்பாளர் திருமதி பிள்ளைநாயகம் அவர்களிடம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளை தரமுயர்த்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. – என்றார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் குழுவினர், பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிமனையின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து; உயிரிழப்புகள் எட்டாக உயர்வு

கடந்த 23 ஆம் திகதி நிகழ்ந்த குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் எட்டாக உயர்ந்துள்ளன.

கிண்ணியா பெரியாற்று முனையைப் பிறப்பிடமாகவும் தற்போது குறிஞ்சாக்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட அலியார்லெப்பை பரீஸ் என்பவருடைய மனைவியும் மகனும் இவ்விபத்தில் சிக்கினர். இவர்களில் மகன் பரீஸ் பஹிர் (வயது 06) அன்றைய தினமெ மரணித்தார் சிறுவனின் தாயான சக்கரையா ஹாலிசா (வயது 40) கிளிநொச்சி வைத்தியசாலையில் அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்12 நாள்களுக்குப் பின்னர் நேற்று இரவு 9 மணியளவில் காலமானார். இதனால் இந்த விபத்து மரணங்கள் எட்டாக உயர்ந்துள்ளன.




# இளம் குடும்பஸ்தரின் சடலம் குடிசை ஒன்றிலிருந்து மீட்பு

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி பகுதியிலுள்ள குடிசை ஒன்றில் இருந்து நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் காயங்கேணி பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சிவஞானம் குகேஸ் எனும் ஐந்து மாத பிள்ளையின் தந்தை என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை நீதி மன்ற பதில் நீதிபதி இலவத்தம்பி சஹாப்தீன் விசாரணைகளை மேற்கொண்ட பின், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு திராய்மடுவில் ரயிலுடன் மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மூன்றாம் குறுக்கு, திராய்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான, இரண்டு பிள்ளைகளின் தந்தையான சேனாதிபதி அசோக் குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று இரவு 8.45 மணிக்கு சென்ற ரயிலுடன் மோதி இவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட திடீர் மரண விசாரனை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் விசாரணைகளை மேற்கொண்டமையுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாரிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










# ஆசிய இளையோர் பாரா போட்டிகளில் இலங்கைக்கு தங்கத்தோடு 4 பதக்கங்கள்

பஹ்ரைனின் மனமா நகரில் நடைபெற்றுவருகின்ற நான்காவது ஆசிய இளையோர் பாரா விளையாட்டு போட்டித் தொடரில் இலங்கை அணியினர் ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ரி47 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் குளியாப்பிட்டிய சூரதூத மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜனனீ விக்ரமசிங்க வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியை நிறைவு செய்ய29.36செக்கன்களைஅவர்எடுத்துக்கொண்டார். இந்தப் போட்டியில் ஜப்பான் மற்றும் தாய்லாந்து வீராங்கனைகள் முறையே தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

இதனிடையே, ஆண்களுக்கான எப்-41 குண்டெறிதல் போட்டியில் கேட்வே சர்வதேசப் பாடசாலையைச் சேர்ந்த ஜேசன் ஜயவர்தன வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். போட்டியில் அவர் 6.64 மீற்றர் தூரத்துக்கு எறிந்திருந்தார். இதில் இந் தோனேஷிய வீரர் அல் அய்யூபி (8.01 மீற்றர்) தங்கப் பதக்கத்தையும், ஈரானின் கொர்பானி கொலனிஜாடிட் (5.87 மீற்றர்) வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான எஸ்-10 சாதாரண நீச்சல் போட்டியில் கலினா பஸ்நாயக்க தங்கப் பதக்கம் வென்றார். போட்டியை அவர் 5 நிமிடங்கள் 25.27 செக்கன்களில் நிறைவுசெய்தார். குறித்த போட்டியில் ஜப் பான் மற்றும் ஹொங்கொங் வீராங்கனைகள் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றெடுத்தனர்.

இதேவேளை, ஆண்களுக்கான எஸ்6-10 சாதாரண நீச்சல் போட்டியில் பங்குகொண்ட இலங்கை வீரர் நவீட் ரஷீன் வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியை நிறைவுசெய்ய 5 நிமிடங்கள் 20.59 செக்கன்களை அவர் எடுத்துக்கொண்டார். இந்தப் போட்டியில் தென் கொரியாவின் ஜூன்டு யேஉம் தங்கப் பதக்கத்தையும், ஈரானின் எப். அலி வெள்ளிப் பதக்கத்தையும் வெற்றிகொண்டனர்.



### இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி

# நியூசிலாந்து வெற்றிபெற 540 ஓட்டங்கள் இலக்கு

மும்பையில் நடைபெற்று வரும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியா தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸை 7 விக்கெட் இழப்புக்கு 276 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் முடித்துக்கொண்டது. இதன் மூலம் இந்தப் போட்டியில் நியூசிலாந்து வெற்றிபெற 540 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

நியூசிலாந்து அணியின் அஜாஸ் படேலின் அற்புதமான சுழல்பந்துவீச்சில் 325 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அஜாஸ் படேல் இந்திய அணியின் அனைத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தி வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார்.

இதையடுத்து, நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்து, இந்திய அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி 28.1 ஓவர்களில் 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அஸ்வின் 4, மொஹமட் சிராஜ் 3, அக்சர் பட்டேல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து நியூசிலாந்தை போலோ-ஒன் முறையில் மீண்டும் துடுப்பெடுத்தாட அழைக்காது,

இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடி, இன்று 7 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது இன்னிங்ஸை முடித்துக்கொண்டது. மயங் அகர்வால் 62, புஜாரா, சுப்மன் கில் இருவரும் தலா 47, அக்சர் பட்டேல் ஆட்டமிழக்காது 41, விராட் கோலி 36 ஓட்டங்களை எடுத்தனர். நியூசிலாந்தின் அஜாஸ் பட்டேல் 4 விக்கெட்டுகளையும், ரச்சின் ரவீந்த்ரா 3 விக்கெட்டுக்




# பாடசாலை 19 வயது டிவிசன் – 3 தொடர் போராடித் தோற்றது யாழ்.மத்திய கல்லூரி

இலங்கை பாடசாலை 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான டிவிசன் - 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை 17 ஓட்டங்களால் வீழ்த்திய காலி வித்தியாலோக கல்லூரி தொடரின் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. எனினும், எதிரணிக்கு கடுமையான போட்டியைக் கொடுத்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீரர்கள் தமது அணியின் வெற்றிக்காக இறுதி ஓவர் வரை போராடியிருந்தனர்.

யாழ் மத்திய கல்லூரி அணி அரையிறுதிப் போட்டியில் ஹங்வெல்ல இராஜசிங்க மத்திய கல்லூரி அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டும், வித்தியாலோக அணி, மொறட்டுவை மெதடிஸ்ட் உயர்நிலைப் பாடசாலையை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றும் இந்த இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

தொடரின் இறுதிப் போட்டி நேற்று சனிக்கிழமை கொழும்பு நாலந்த கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வித்தியாலோக அணி, முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. கவிந்த 53 ஓட்டங்களையும், லக்ஷான் 34, மத்ஷ 29 ஓட்டங்களையும் பெற, வித்யாலோக அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த ஓட்ட எண்ணிக்கையானது, யாழ்ப்பாணம் மதத்திய கல்லூரிக்கு எதிராக இந்தத் தொடரில் அணியொன்று பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகப் பதிவாகியது.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் அஜேய் 9 ஓவர்கள் வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற, கௌதம் மற்றும் கஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

அதன் பின்னர் 211 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, ஒரு கட்டத்தில் 32 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும். இறுதி ஓவர்களில் வேகமாக ஆட வேண்டிய நிலை ஏற்பட்டமை அழுத்தத்தை அதிகரித்தது.

இறுதி ஓவர் வரை போராடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்து சம்பியன் கிண்ணத்தைத் தவறவிட்டது.

யாழ் மத்திய கல்லூரியின் சஞ்சயன் 55 ஓட்டங்களையும், அஜேய் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

வித்தியாலோக கல்லூரி அணியின் பந்து வீச்சில் சசிந்து, செனித் பிரவீன் மற்றும் உமங்க ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்டோருக்கான டிவிசன் - 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் வித்தியாலோக கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வெற்றிகொள்ள, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வார இறுதியில் 2 வாரங்கள் நாட்டை முடக்கத் திட்டம்?

## பண்டிகைக் காலத்தை ஒட்டி வரலாம்

இம்மாத பிற்பகுதியில் இரண்டு வாரகால முடக்கமொன்றை அமுல்படுத்த அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்ளலாம் என்பதால் இவ்வாறு முடக்கம் ஒன்றை அமுல்படுத்த அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி டிசெம்பர் 23ம் திகதி முதல் ஜனவரி முதல் வாரம் வரை நாட்டை சுகாதார கட்டுப்பாடுகளுடன் முடக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சுகாதார கட்டுப்பாடுகளை கடுமையாக்க அரசு தீர்மானித்துள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் முதல் மற்றும் இரண்டாவது கொவிட் அலையை தொடர்ந்து நாடு மீண்டும் திறக்கப்பட்ட நிலையில், கடந்த சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் புத்தாண்டு கொத்தணி உருவாகியது. இதனையடுத்து இலங்கையில் கொவிட் தொற்று மிக வேகமாக பரவியதுடன், லட்சக்கணக்கானவர்கள் தொற்றினால் பாதிக்கப்பட்டமையுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் பல மடங்காக அதிகரித்தது.

இந்நிலையிலேயே, இலங்கையில் மீண்டும் கொவிட் அலை ஏற்படாமல் இருக்க இவ்வாறு முடக்கத்தை அமுல்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஒரு லட்சம் காணி உறுதிகளை வழங்குவதே அரசின் நோக்கம்

## காணி அமைச்சர் எஸ். சந்திரசேன கூறுகிறார்



ஒரு லட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும், இந்த வருட இறுதிக்குள் 75ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்க முடியுமெனவும் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

காணி உறுதிப்பத்திர மற்றசகலகாணிகளுக்கும் நடமாடும் சேவைகள் ஊடாக ஸ்வர்ணபூமி மற்றும் ஜயபூமி உள்ளிட்ட காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க எழுப்பிய வாய்மூலக் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

1972 ஆம் ஆண்டு காணி சீர்திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்தே சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கடந்த காலத்தில் 200 காணி உறுதிப்பத்திரங்கள் காணாமல் போயுள்ளன. ஒரு ஏக்கர் காணி ரூபா 500க்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த விடயம் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்

# போதைப்பொருளுடன் விமான நிலையத்தில் வர்த்தகர் கைது

சென்னையில் இருந்து இலங்கைக்கு ஒன்றரைக் கிலோ ஐஸ் போதைப்பொருளைக் கடத்தி வந்தவர் எனக் கருதப்படும் வர்த்தகர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 43 வயதான வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்கப் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சுங்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் அவற்றை நாட்டிற்கு கடத்திய வர்த்தகர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள பொலிஸ்துறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# போலி கனேடிய விசாவைப் பாவித்து பயணிக்க முயன்ற யாழ்வாசி கைது!

## கட்டுநாயக்காவில் நேற்றுச் சம்பவம்

போலி கனேடிய விசாவைப் பயன்படுத்தி ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் ஊடாகக் கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கை இளைஞன் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் எல்லைக் கண்காணிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட 36 வயதுடையவர் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நோக்கிச் செல்லும் எமிரேட்ஸ் விமானத்தில் ஏறுவதற்காக அவர் அதிகாலை 02.55 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரது நடத்தையில், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு, குடியகல்வு திணைக்கள எல்லையில் உள்ள எமிரேட்ஸ் விமான சேவை அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, அவரிடமிருந்த கனேடிய விசா உட்பட ஏனைய ஆவணங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைத்தனர்.

அதிகாரிகள் நடத்திய தொழில்நுட்ப சோதனையில் விசா முழுமையாக போலியான ஆவணம் என்பது தெரிய வந்தது. குடிவரவு குடியகல்வு திணைக்களம் சந்தேக நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளது.

# கதையாடல் அரங்கம்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணைய வழி பன்னாட்டு அரங்கக் கதையாடல் தொடர் – 09 நிகழ்வின் 54ஆவது கதையாடல் நாளை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள்பேராசிரியர் அ.சண்முகதாஸ், 'பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நாடகப் பணிகளும் கூத்துப் புத்தாக்கமும்' என்ற விடயப்பொருளில் கதையாடவுள்ளார் .

நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

ஆர்வமுடையவர்களை



சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

## முல்லைத்தீவு ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவிப்பு









ராஜபக்ஷ ஆட்சியில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், இணைய ஊடக அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், முல்லைத்தீவு ஊடகவியலாளர் விஸ்வச்சந்திரன் மீது படையினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டித்தும் நேற்றைய தினம் மாலை நீர்கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. நீர்கொழும்பு ஊடகக் கழகம், நிபுணத்துவ இணைய ஊடகவியலாளர்கள் சங்கம், கம்பஹா மாவட்ட ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு மற்றும் கம்பஹா மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.நீர்கொழும்பு மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, நீர்கொழும்பு இரவுச் சந்தை மைதானம் வரை பேரணியாகச் சென்று இப் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

# ரயில் பாதைகள், பெருந்தெருக்கள் பொறியியலாளர்களுக்கு நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் பிரக்ஞை அவசியம்

## வலியுறுத்துகின்றார் கஜேந்திரன் எம்.பி.



நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போக்குவரத்து அமைச்சு மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக செல்வராசா கஜேந்திரன் உரையாற்றினார். அவரது உரையின் முழு விவரம் வருமாறு:-

வீதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சர்களதும் துணை சார்ந்த உத்தியோகத்தர்களதும் கவனத்திற்கு சில விடயங்களைக் கொண்டுவர விரும்புகின்றேன்.

நிலைபேறான அபிவிருத்தி என்பதில் ரயில் பாதைகள், பெருந்தெருக்கள் மற்றும் கிராமிய வீதிகள் என்பனவற்றின் அபிவிருத்தியும், போக்குவரத்தும் மிக அடிப்படையான ஒன்றாகவே காணப்படுகின்றன. ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாக உள்ளன.

அந்த வகையில் இந்த நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கருவானது வெறுமனே, நகர அபிவிருத்தி திட்டமிடல் துறை சார்ந்தவர்களிடம் மட்டும் இருந்தால் போதாது. மாறாக இந்த வீதி அபிவிருத்தி, வடிகாலமைப்பு அபிவிருத்தி தொடர்பானவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் உள்ளூர் வீதி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கும் தொழினுட்ப உத்தியோகத்தர்களும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் தெளிவும் பிரக்ஞையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதனை நாம் அனுபவ ரீதியாக உணர்கின்றோம்.

அவ்வாறில்லாது ரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள், மற்றும் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது மழை வெள்ளப்பெருக்கின் போது எமது சமூகம் பாரதூரமான அழிவுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

தென்னிலங்கையைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் வடக்கு, கிழக்கில் இவ்வாறான பாதிப்புக்களை நாம் நடைமுறை ரீதியாகச் சந்தித்துள்ளோம்.

குறிப்பாக 2009 இல் இனவழிப்பு மூலம் உங்களால் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கு ரயில் பாதைகள் அபிவிருத்தியானது அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ரயில் பாதைகள் அமைக்கும் போது, நீர்த்தேக்கங்களது அணை போன்று பல இடங்களில் அணைகள் போடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பாரிய அணைகளை அமைத்து ரயில் பாதைகளை அமைக்கும் போது, எத்தகைய அமைவிடத்தினூடாக அந்த வீதி அமைக்கப்படுகின்றது, மழை வெள்ளம் வரும்போது அந்த வெள்ளம் எப்படி வெளியேறிச் செல்லும் என்பன தொடர்பான எந்தவித திட்டமிடல்களோ, சிந்தனையோ இல்லாமல் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் பாரிய வெள்ள அழிவுகளுக்கு வடக்கு மாகாணம் முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதேபோன்றுதான் வீதி அபிவிருத்தியிலும் இவ்வாறான தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்கள் மற்றும் போக்குவரத்து துறைசார்ந்த அமைச்சர்கள் இந்த வெள்ள அனர்த்தம் தொடர்பிலும் அவற்றை வெளியேற்றும் வடிகாலமைப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமென மிகவும் விநயமாக வேண்டுகின்றேன்.

அடுத்து அவசரமாக திருத்தப்பட வேண்டிய வீதிகள், பாலங்கள் தொடர்பில் சில தரவுகளை இங்கு முன்வைக்கின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா கிராமத்திற்குள் செல்லும் உள்ளக வீதி கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் மோசமான முறையில் கொங்கிறீற் இடப்பட்டுள்ளது. வீதி முழுவதற்கும் கொங்கிறீற் இடப்படாது, வாகனங்களது இரண்டு சக்கரங்களும் செல்லும் தடத்திற்கு மட்டும் கொங்கிறீற் இடப்பட்டுள்ளது. இதனால் மழை வெள்ளம் காரணமாக வீதியின் நடுப்பகுதி மற்றும் இரு மருங்குகளும் முற்றாக அரித்துச் செல்லப்பட்டுள்ளமையினால் மோட்டார் சைக்கிள்களோ, வாகனங்களோ செல்ல முடியாத நிலை பல வருடங்களாக ஏற்பட்டுள்ளது. இவ்வீதி தொடர்பில் உடனடியாக உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

காஞ்சிரங்குடாவிலிருந்து - சிறுவள்ளிபுரம் ஊடாக கஞ்சிகுடிச்சாறு செல்லும் வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனையும் உடனடியாக செப்பனிடல் வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கிண்ணையடித்துறையிலிருந்து முருக்கன்தீவு செல்லும் பாதை 5கி.மீற்றர் செப்பனிடப்படல் வேண்டும்.

கிண்ணையடித் துறை ஆற்றைக் கடப்பதற்காக பாலம் இல்லாத காரணத்தால் மக்கள் தோணிகளைப் பயன்படுத்தியே ஆற்றைக் கடக்கின்றார்கள். எனினும் பயணம் செய்வதற்கு தோணியைப் பயன்படுத்தியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் காரணமாகவே மக்கள் ஆபத்து நிறைந்த அந்தப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள். அவர்களது பயணத்திற்காக எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நான்கு தோணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்திருந்தேன். பிரதேச செயலகம் அந்த நிதியில் நான்கு தோணிகளை வாங்கியது. அதனை நாம் கடந்த மாதம் கையளித்திருந்தோம். எனினும் தோணியில் மாணவர்களும் மக்களும் பயணிப்பது மிகவும் ஆபத்தானது என்பதனை தங்களது கவனத்திற்கு கொண்டுவருவதுடன், அந்த ஆற்றிற்கு மேலாக பாலம் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அண்மையில் கிண்ணியாவில் படகு விபத்து ஏற்பட்டிருந்தது உங்களுக்குத் தெரியும். அதனைக் கருத்தில் கொண்டு பாலத்தினை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிரான் சந்தியிலிருந்து குடும்பிமலை ஊடாக மயிலத்தமடு செல்லும் 35 கி.மீற்றர் நீளமான வீதி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை. போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் வீதி திருத்தப்படவில்லை. அந்தப் பாதையூடாக கிரானிலிருந்து சுமார் இரண்டு லட்சம் மாடுகள் மயிலத்தமடுவிற்கு மேற்சலிற்காக கொண்டு செல்லப்படுவதுண்டு. அந்தப் பண்ணையாளர்கள் மாடுப்பாலை நகரத்திற்குக் கொண்டுவருவதற்கு குன்றும் குழியுமாக உள்ள வீதியூடாக நீண்ட நேரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. நேரவிரயம் காரணமாக பால் பழுதடையும் நிலையும் காணப்படுகிறது. அதேபோன்று விவசாயிகளும் வீதி இன்மையினால் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வீதியும் உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

பெண்டுகள்சேனை - முறுத்தானை - அக்குரணை செல்லும் வீதியும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை. இதனால் விவசாயிகள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த வீதியும் உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

வாகரையிலிருந்து - ஓமடியாமடு செல்லும் வீதியும் அவ்வீதியிலுள்ள பாலங்களும் திருத்தப்படல் வேண்டுமென்பதுடன் றெயித்தனை சந்தியிலிருந்து - மடியாமடு செல்லும் 10 கிலோ மீற்றர் நீளமான வீதி உடனடியாக திருத்தப்படல் வேண்டும். இவ்வீதிகள் பல தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்டுவருகின்றது.

இதுபோன்று திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் கற்பட்டியிலிருந்து - பெரியகல்லரிப்பு வரை செல்லும் 7 கி.மீற்றர் நீளமான வீதி திருத்தப்படல் வேண்டும். விவசாயிகள் பயன்படுத்தும் இந்த வீதி சேறும் சகதியுமாக மோசமாகச் சேதமடைந்துள்ளதால், விவசாயிகள் பசளை, மருந்துகளை எடுத்துச் செல்வதற்கும், அறுவடை செய்யும் விளைபொருள்களைக் கொண்டு செல்வதற்கும் முடியாதளவுக்கு நிலைமை உள்ளது. எனவே இவ்வீதி உடனடியாக திருத்தப்படல் வேண்டும்.

அதேபோன்று வெருகல் பிரதேச செயலகத்திற்கு அண்மையிலுள்ள சூரநகர் சந்தியிலிருந்து வெருகல் முகத்துவாரம் மகாவலிகங்கை வரையும் மற்றும் கல்லடி வரையும் செல்லும் 6 கி.மீற்றர் நீளமான வீதி உடனடியாக செப்பனிடப்படல் வேண்டும்.

அத்துடன் மூதூர் கட்டைப்பறிச்சானுக்கும் - மூதூருக்கும் இடையிலான கட்டைப்பறிச்சான் பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. அது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்துள்ளேன். எனினும் அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் எதுவும் தெரியாது. இப்பாலத்தினை திருத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று கட்டைப்பறிச்சான சின்னபாலம் அல்லது றால்பாலம் எனப்படும் பாலம் 60 வருடங்களுக்கு முன்னர் குழாய்கள் வைத்து கொங்கிறீற் இடப்பட்டது. தற்போது அந்தக் குழாய்கள் சேதமடைந்து பாலம் தாழிறங்கியுள்ளது. அதனால் மழைவெள்ளம் பெருகும்போது பாலத்திற்கு மேலாக 2 அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்கின்றது. கடந்த மாதம் மழை காரணமாக வெள்ளம் பாலத்தை மூடிப்பாய்ந்து கொண்டிருந்தபோது, அப்பாலம் ஊடாகச் சென்ற மாட்டு வண்டியின் மாடுகள் அச்சமடைந்து திமிறியதால் பாலத்தினுள் வீழ்ந்து மாடுகள் இறந்துவிட்டன. ஓட்டிச்சென்றவர் மயிரிழையில் உயிர்தப்பினார். ஆகவே இப்பாலமும் உடனடியாக திருத்தப்படல் வேண்டும். மூதூர் அம்மன்நகரிலிருந்து - கிணாந்திமலை பாலம் வரை செல்லும் மூன்றரை கிலோ மீற்றர் வீதி கடந்த 40 வருடங்களாக திருத்தப்படவில்லை.

ஈச்சிலம்பற்று சந்தியிலிருந்து - இலங்கைத்துறைமுகத்துவாரம் வரையான 4 கி.மீற்றர் நீளமான வீதியும், சந்தோசபுரத்திலிருந்து - உப்பூறல் பிரதான வீதி 10 கி.மீற்றர் நீளமான வீதியும் கடந்த 40 வருடங்களாக திருத்தப்படவில்லை. இவ்வீதிகளையும் உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கும்புறுப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் தென்னமரவாடியிலிருந்து அக்கரை கொக்குத்தொடுவாய் செல்லும் வீதியில் 4 கி.மீற்றர் நீளத்திற்கு வீதி இன்மையினால் விவசாயிகள் பெரும் பாதிப்படைகின்றார்கள். வயலுக்குத் தேவையான பசளை மற்றும் பொருள்களைத் தலையில் சுமந்தவாறும் படகுகள் மூலமும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அறுவடை செய்யும் நெல் மூடைகளையும் தலையில் சுமந்து சென்று படகுகளில் ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளது. எனவே இவ்வீதியும் உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.

திருகோணமலையையும் - முல்லைத்தீவையும் இணைக்கும் வகையில் கொக்குளாய்க்கும் - புல்மோட்டைக்கும் இடையிலான பாலம் அமைக்கப்படல் வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாயிலிருந்து - பறையனாறு வரை செல்லும் 16 கி.மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படல் வேண்டும். இப்பாதையில் மூன்று பாலங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வீதி திருத்தம் இன்னமும் நடைபெறவில்லை. இந்த வீதி ஓர் விவசாய வீதியாகும். சுமார் 3,500 ஏக்கர் நெல்வயலுக்கு செல்பவர்கள் இவ்வீதியூடாகவே பயணிக்கின்றார்கள். பசளைகள் மருந்துகளைக் கொண்டு செல்வதற்கும் அறுவடை செய்த நெல் மூடைகளை வீட்டுக்கு கொண்டுவருவதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். இந்த வீதியில் சுமார் 20 இடங்களில் சிறிய சிறிய பாலங்கள் வைக்க வேண்டியுள்ளன. இவ்வீதியைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குமுழமுனை - தண்ணிமுறிப்பு - தண்டுவான் வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது. 2,800 ஏக்கர் வயல் நிலங்களுக்குச் செல்லும் இந்த வீதியும் மற்றும் குமுழமுனை - நித்தகைகுளம் - ஆண்டான்குளம் செல்லும் 9 கி.மீற்றர் நீளமான வீதி மோசமாக முற்றாகச் சேதமடைந்துள்ளன. சுமார் 1,200 ஏக்கர் வயல் நிலங்களுக்கு செல்லும் விவசாயிகள் பயன்படுத்தும் இவ்வீதியிலுள்ள பாரிய பாலம் சேதமடைந்துள்ளது. அதனால் ஆற்றைக் கடப்பதற்கு படகுகளை பாவிக்கும் விவசாயிகள் பசளையினை கொண்டு செல்வதற்கும், அறுவடை நெல்களை கொண்டு செல்வதற்கும் மூடைகளை தோளில் சுமந்து சென்று ஏற்றியிறக்க வேண்டியுள்ளது.

உடையார் கட்டுச் சந்தியிலிருந்து - இருட்டுமடு ஊடாக - சுதந்திரபுரம் செல்லும் வீதி திருத்தப்படல் வேண்டும்.

மாங்குளம் பிரதேசத்தில் பாலப்பாணி - தேக்கங்காடு வீதி 16 கிலோ மீற்றர் திருத்தப்படல் வேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ரயில் பாதைகள், பெருந்தொருக்கள்...

(9 ஆம் பக்க தொடர்ச்சி.....)

வவுனியா வடக்கு பிரதேசத்தில் சின்னடம்பம் கிராத்திலுள்ள உள்ளக வீதிகள் மோசமாகச் சேதமடைந்துள்ளன. அவை மிக நீண்டகாலமாகத் திருத்தப்படவில்லை. அவை உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

ஓமந்தை அரசடிமுறிப்பு பிரதான வீதி சேதமடைந்துள்ளது, 3 கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியால் பெருமளவு விவசாயிகள் வயல் நிலங்களுக்குச் சென்று வருகின்றார்கள். வீதி சீரின்மையினால் மக்களும் விவசாயிகளும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வீதியும் உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

அதேபோன்று, பண்டாரிகுளம் மின்மமாற்றிச் சந்தியிலிருந்து - சேவாலங்கா பண்ணை வரை செல்லும் 3 கி.மீற்றர் வீதியும், பண்டாரிகுளம் சந்தி - விபுலானந்தா பாடசாலை ஊடாக சூசையப்பர் வீதி வரை செல்லும் 3 கிலோ மீற்றர் வீதியும் திருத்தப்படல் வேண்டும்.

அடுத்து, மெனிக்பாம், செட்டிகுளம் பகுதியிலுள்ள 6 கி.மீற்றர் நீளமான உள்ளக வீதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோல, பூநகரி பரமன் கிராய் - கல்முனை வீதி 16 கி.மீற்றர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக திருத்தப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தாழையடி - சுண்டிக்குளம் வீதி திருத்தம் பல வருடங்களாக மந்தகதியில் இடம்பெறுகின்றது. அதனால் மீனவர்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

சுண்டிக்குளம் - முல்லைத்தீவை இணைக்கும் தொடுவாய்க்கு குறுக்காக பாலம் அமைக்கப்படல் வேண்டும்.

மருதங்கேணி - நாகர்கோவில் வரையான வீதி காப்பெற் இடப்பட்டு ஓராண்டுக்குள் சிதைந்துவிட்டது. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாகர்கோவில் - எழுதுமட்டுவாழ் வீதி திருத்தப்படல் வேண்டும்.

**கிண்ணையடித் துறை ஆற்றைக் கடப்பதற்காக பாலம் இல்லாத காரணத்தால் மக்கள் தோணிகளைப் பயன்படுத்தியே ஆற்றைக் கடக்கின்றார்கள். எனினும் பயணம் செய்வதற்கு தோணியைப் பயன்படுத்தியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் காரணமாகவே மக்கள் ஆபத்து நிறைந்த அந்தப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள். அவர்களது பயணத்திற்காக எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நான்கு தோணி களுக்கான நிதி ஒதுக்கீடு செய்திருந்தேன். பிரதேச செயலகம் அந்த நிதியில் நான்கு தோணிகளை வாங்கியது. அதனை நாம் கடந்த மாதம் கையளித்திருந்தோம். எனினும் தோணியில் மாணவர்களும் மக்களும் பயணிப்பது மிகவும் ஆபத்தானது என்பதனை தங்களது கவனத்திற்கு கொண்டு வருவதுடன், அந்த ஆற்றிற்கு மேலாக பாலம் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்**

### போக்குவரத்து துறை

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத்துறை ஊழல் நிறைந்ததாக உள்ளது. தகுதியற்ற அரசியல் நியமனங்கள் காரணமாக போக்குவரத்துத் துறை பாரிய சீர்கேடுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள் சார்ந்த தொழிற்சங்கங்களினால் பாரிய பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் தலையீடு காரணமாக தகுதியற்றவர்கள் உயர் பதவிகளிலும், தகுதியானவர்கள் கீழான பதவிகளிலும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். ஊழியர்களுக்கிடையில் பாரிய முட்டிமோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நடத்துநர்கள் மீதோ, சாரதிகள் மீதோ குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால், அரசியல் பழிவாங்குதல்கள் காரணமாக சட்ட விதிமுறைகளுக்கு மாறாக பல மாதங்களாக விடுமுறையில் நிற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்த பின்னர், தீர்ப்புக்களுக்காக நீண்டகாலம் காத்திருக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். விசாரணையின் பின்னர் தீர்ப்புக் கூறுவதற்காக கோவைகள் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன. செல்வாக்குள்ளவர்கள், கொழும்பிலுள்ளவர்களுக்கு இலஞ்சம் கொடுத்து தண்டனையைக் குறைத்துக் கொள்கின்றார்கள். அல்லது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கின்றார்கள். இந்த விடயத்தில் தலைமையகத்திலுள்ள சிங் என்ற பெயர்தான் அதிகளவில் பேசப்படுகின்றது.

போக்குவரத்து அமைச்சர் அவர்களே இந்த சீர்கேடுகளை விரைவாகச் சீர்செய்து கொள்ளுங்கள் என்று மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.




CRM என்ற பதவியிலுள்ள அதிகாரி, கொழும்பு தலைமையகத்திற்கு சாலை தொடர்பான பிரச்சினைகளை எடுத்துச் செல்வதானால், மொட்டு சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் இளஞ்செல்வன் ஊடாகவே செல்ல முடியும் என்றளவுக்கு அடாவடிகள் இருக்கின்றன.

வடமாகாணத்திற்குரிய, மெக்கானிக்கல் எஞ்சினியராக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரை நியமித்தமைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் அவருக்கு மொழி தெரியாத காரணத்தினால், வடக்கு மாகாணத்தில் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். வடக்கில் தரம் 5 என்ற தகுதியுடைய உத்தியோகத்தர்கள் உள்ளபோதும், மொழி தெரியாத பெரும்பான்மையினத்தவரை நியமித்தமையானது இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

இவ்வாறான செயற்பாடுகளை நீங்கள் களையவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் உள்ளவரை உங்களால் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியாது.

கடந்த 15 வருடங்களாக பல உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. பல தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அனைத்துமே மொட்டுக் கட்சியிடம் மண்டியிட்டால் மட்டுமே அனைத்தும் நடைபெறும் என்ற நிலையே காணப்படுகின்றது.

மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடையில் பாரிய சம்பள முரண்பாடுகள் காணப்படுகின்றன. பல வருடங்களாகியும் அந்த முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை. அதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு மாகாண மொட்டுச் சங்கத்தின் இணைப்பாளரான இளஞ்செல்வன் என்பவரும், தலைமையகத்தில் உள்ள சிங் என்று அழைக்கப்படும் நபருமாக போக்குவரத்துத் துறையை சீரழித்துக் கொண்டிருக்கின்றனர் என பெருமளவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே இவ்விடயங்களை கருத்திற்கொண்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு போக்குவரத்துத் துறையை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டை அபிவிருத்திப்பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமானால், வீதி அபிவிருத்தி தொடர்பான விடயத்திலும், வடிகாலமைப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் ரயில் பாதை அபிவிருத்தி, பெருந்தெருக்கள், உள்ளக வீதிகளது அபிவிருத்தி என்பவற்றில், மழைவெள்ளம் தொடர்பில் எந்த விடயமும் கருத்திற் கொள்ளப்படவில்லை.

அதேபோன்று, ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தியிலும் பெருமளவு வீதிகள் போடப்பட்டுள்ளன. இவை எவற்றிலும் வாய்க்கால்கள், வடிகால்கள் பற்றி கவனம் செலுத்தப்படவில்லை.

இதனால் விவசாய நிலங்களில் வெள்ளம் தேங்கி நின்று விவசாயம் முற்றாக அழிந்துபோகும் நிலைதான் அதிகரித்துள்ளது. வீதிகள் போடப்பட்டமையினால் போக்குவரத்து இலகுவாகியுள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அதேவேளை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய வேறு விடயங்கள், கவனத்தில் கொள்ளப்படாமையினால் அந்த வீதிகளால் பிணங்களைத் தான் கொண்டு செல்ல வேண்டுமென்ற நிலைதான் தோன்றுகின்றது. ஏனெனில் மக்களது விவசாய அபிவிருத்தி முற்றாக அழிக்கப்படுகின்றது. அதிகளவு மழைவெள்ளம் ஏற்பட்டு, நெஞ்சளவு வெள்ளம் வந்தால் கூட மறு நாள் வெள்ளம் வடிந்துவிடக் கூடியளவுக்கு நிலைமை இருந்தது. ஆனால் இன்று மூன்று வாரங்கள் சென்றாலும் வெள்ளம் வெளியேறாத நிலைதான் உள்ளது. காரணம் என்னவெனில் வடிகாலமைப்புத் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

எனவே இவ்விடயங்களை நீங்கள் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.



## எரிவாயு சிலிண்டர்கள் இல்லை; உணவகங்கள் நெருக்கடியில்

*இலங்கையில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டமையால் உணவகங்களில் சமைத்த உணவுகள் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*உணவகத்தில் உணவுகள் சமைப்பதற்குக் கட்டாயம் எரிவாயு அவசியமாகும் என சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.*

*உணவகங்களில் எரிவாயு அடுப்புகள் மாத்திரமே உள்ளன. எரிவாயு கலவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட சிலிண்டர்களின் விநியோகத்தை மாத்திரம் நிறுத்துமாறு லிட்ரோ நிறுவனத்திடம் கேட்டுக் கொள்கின்றோம். இல்லை என்றால் இன்று முதல் உணவக உணவு விநியோகம் முழுமையாக முடங்கிவிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 20 இடங்களில் எரிவாயு வெடிப்புச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2021இல் வெளியிடப்பெற்றது.